மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

முன்னிலை:- திருமதி.**N.**ரேணுகா**.,** பி.ஏ., பி.ல்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
சூலூர்
2024 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 2 ம் நாள் வெள்ளிக்கிழமை

இடை ம

னு எண்.3/2023

அசல் வழக்கு எண்**.383/2017**

திரு.செந்தில்குமார் ...மனுதாரர் / வாதி

//எதிர்//

1. திருமதி.வெள்ளையம்மாள் (Died)
2. திருமதி.பத்மாவதி
3. திருமதி.சத்யபிரியா
4. திரு.செந்தில்குமார்
5. திரு.பழனிசாமி
6. திருமதி.வசந்தாமணி
7. திருமதி.தனலட்சுமி (Died)
8. திருமதி.பரமேஸ்வரி
9. திரு.பழனிசாமி
10. திரு.மாணிக்கம்
11. தாரணி
12. கார்த்திகேயன்
13. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம்,
சூலூர் தாலூக்கா, சூலூர்

...எதிரிமனுவாதிகள்/பிரதிவாதிகள்

14. தேவராஜ்
15. செந்தில்குமார்
16. ரங்கசாமி
17. சாமிநாதன்
18. வசந்தாமணி
19. கமலம் ...Proposed party

இந்த மனுவானது 24.01.2024 அன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் Mrs.R.ஸ்ரீசித்ராதேவி, அவர்கள் ஆஜராகியும், 14 முதல் 17 வரையிலான எதிர்மனுதாரர்கள் தரப்பில்

கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.P.K.பிரபுராம், M.S.கிரிதரண் ஆகியவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.சம்பத் அவர்கள் ஆஜராகியும், 9ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கண்ணன், அவர்கள் ஆஜராகியும், 6, 8 மற்றும் 10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ரவீந்திரன், அவர்கள் ஆஜராகியும் 18 மற்றும் 19ம் எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்து ஆஜராகாததால் அவர்களை ஒருதலைபட்சமாக்கியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

உத்தரவு

10 முதல் 19 வரையுள்ள எதிர்மனுதாரர்களை மேற்படி வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி மனுதாரரால் கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:

1.1. மனுதாரர்/வாதியின் தாய்வழி பொதுக் கூட்டுக் குடும்ப சொத்தில் பாகப்பிரிவினை கோரி மனுதாரர்/வாதி அசல் தாவாவினை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

1.2. மனுதாரர்/வாதி தாவாச் சொத்துக்களின் ஆள்வரையறை அடிப்படையில் அசல் வழக்கினை பல்லடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, பின்னிட்டு திருப்பூர் மாவட்டம் உருவாக்கப்பட்டதில் தாவாச் சொத்துக்களின் ஆள்வரையறை சூலூர் வட்டத்திற்குள் இருந்த காரணத்தால் மேற்படி வழக்கானது மேதகு கோயம்புத்தூர் 3 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டது. அங்கு மேற்படி வழக்கானது O.S.No.888/2013 என்ற எண்ணாக வழக்கு கோப்பில் எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. அதற்குப் பின்னிட்டு மேதகு நீதிமன்றத்தில் இந்த வழக்கு

OS.No.383/2017 என பட்டியலிடப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

1.3. மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதி வெள்ளையம்மாள் காலமாகிவிட்டார் அவரின் கணவரும் மனுதாரர்/வாதியின் மாமாவுமான கருப்புசாமியும் காலமாகிவிட்டார், அவரின் வாரிசான 2ம் பிரதிவாதி வழக்கில் முன்பே சேர்க்கப்பட்டுள்ளார்.

1.4. 7ம் பிரதிவாதியான தனலட்சுமி 02.10.2010 அன்று காலமாகிவிட்டார் அவரின் வாரிசுகளான கணவர் மாணிக்கம், மகள் தாரிணி, மகன் கார்த்திகேயன் ஆகியோரை 10, 11 மற்றும் 12 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளாக இந்த வழக்கில் சேர்ப்பது அவசியமாகிறது. மேலும் 13ம் எதிர்மனுதாரர் சார் பதிவாளர் வழக்குச் சொத்தைப் பொறுத்து கிரையம் மற்றும் பரிமாற்றங்கள் செய்துள்ளதால் அவரையும் இந்த வழக்கில் 13 வது எதிர்மனுதாரராக சேர்ப்பது அவசியமாகிறது.

1.5. இந்த வழக்கில் 14 முதல் 19 வரையுள்ள எதிர்மனுதாரர்கள் இந்த வழக்கில் எதிர்வாதிகளாகவும், எதிர்மனுதாரர்களாகவும் சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

1.6. முதல் பிரதிவாதியின் கணவர் கருப்புசாமி 1987ல் ரங்காத்தாள் என்பவருக்கு அவரின் தகப்பனார் ராமணகவுண்டர் அவர்களின் ஒரு பகுதி சொத்தில் நீலம்பூர் கிராமம் க.ச.நெ.618/2ல் சரிபாதி வடபுறம் 1 ஏக்கர் 8 செண்ட் க.ச.எண்.623/1 நெ.காலையில் 1 ஏக்கரா 2 செண்ட், க.ச.எண்.858/1 ல் பொதுவில் 11 செண்ட் ஆகியவற்றை ஒரு ரங்காத்தாள் என்பவருக்கு விற்றுவிட்டார். ஆகவே ரங்காத்தாள் தற்போது இறந்துவிட்ட காரணத்தால் அவரின் வாரிசுகளான தேவராஜ் 14 எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் செந்தில்குமார் 15ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகியோரை இவ்வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியம் உள்ளது. மேலும் 14, 15ம் எதிர்மனுதாரர்கள் மேற்படி ரங்காத்தாள் கிரையம் பெற்ற சொத்துக்களைப் பொறுத்து தங்களது பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்துள்ளார்கள்

ஆகவே அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்ப்பது அவசியமாகும்.

1.7. ஆதியில் வழக்குச் சொத்து குழந்தே கவுண்டர் என்பவருக்கு உரிமையானது அவருக்கு இரண்டு மகன்கள் ராமண்ண கவுண்டர், நஞ்சப்ப கவுண்டர், ராமண்ண கவுண்டர் வாரிசுகளான மனுதாரர்/வாதி உள்பட அனைவரையும் இந்த வழக்கில் வாதி, பிரதிவாதிகளாக சேர்த்து வழக்குப் போடப்பட்டது. குழந்தே கவுண்டரின் இன்னொரு வாரிசான நஞ்சப்ப கவுண்டரின் வாரிசுகளை இந்த வழக்கில் மனுதாரர்/வாதி சேர்க்கவில்லை. ஆனால் நஞ்சப்ப கவுண்டரின் மகன் குழந்தே கவுண்டர், குழந்தே கவுண்டரின் மகன்கள் ரங்கசாமி 16 வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் சாமிநாதன், 17 வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஆகியோர் பெயரில் மேற்படி வழக்குச் சொத்தின் அனுபவ சுவாதீன அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளதால் இவர்களையும் இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. மேலும் இவர்களின் சகோதரிகளான வசந்தாமணி 18 வது எதிர்மனுதாரர்/பிரதிவாதி மற்றும் கமலம் 19 வது எதிர்மனுதாரர்/பிரதிவாதியாக வாரிசுரிமை அடிப்படையில் பிரதிவாதிகளாக சேர்க்கப்படுகிறார்கள்.

1.8. மேலும் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள பத்திர எண்.928/1987 ன் படி ஒரு ரங்காத்தாளுக்கு விற்ற கருப்புசாமி மனுதாரர்/வாதியின் தாயாரின் சகோதரர் ஆவார். அவர் மனுதாரர்/வாதிக்கு தெரியாமல் மனுதாரர்/வாதியின் தாத்தா ராமண்ண கவுண்டர் பெயரில் இருந்த சொத்தை விற்றது தற்போது தான் மனுதாரர்/வாதிக்கு தெரியவந்துள்ளது.

1.9. ஆகவே ரங்காத்தாளின் வாரிசுகளையும், குழந்தே கவுண்டரின் வாரிசுகளையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஆகவே 10 முதல் 19 வரையுள்ள எதிர்மனுதாரர்களை மேற்படி வழக்கில் எதிர் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

2). 14 முதல் 17 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:

2.1. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. முதல் பிரதிவாதியின் கணவர், 2ம் பிரதிவாதியின் தகப்பனார், 3, 4 பிரதிவாதிகளான தகப்பனார் கருப்புசாமி மற்றும் அவரது சகோதரர் பழனிசாமி ஆகியோர் கடந்த 1987ம் வருடத்தில் 14 மற்றும் 15 எதிர்மனுதாரர்களின் தாயாரான ரங்காத்தாள் பெயரில் க.ச.618/2 நெ.காலையில் உள்ள பு.ஏ.2.16ல் சரிபாதி வடபுறம் பு.ஏ.1.08ம், க.ச.623/1 நெ.காலை பு.ஏ.0.25ல் தென்புறம் சரிபாதி பு.ஏ.1.02-1/2 மற்றும் அதைச்சேர்ந்த கிணர், மற்றும் க.ச.858/1 நெ காலையில் பு.ஏ.0.22-1/2 ஆக ஒட்டு பு.ஏ.2.33 விஸ்தீரணமுள்ள விவசாய பூமியை எழுதிக்கொடுத்துள்ளார் என்பது உண்மை. மேலும் ரங்காத்தாள் தற்பொழுது இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளான 14 மற்றும் 15 எதிர்மனுதாரர்களை இவ்வழக்கில் சேர்க்கவேண்டிய அவசியம் உள்ளதாக தெரிவித்துள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானவையாகும். உண்மையில் ரங்காத்தாள் என்பவர் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக 10.06.2013ம் ஆண்டே காலமாகிவிட்டார். மேலும் கடந்த 24.06.1987ம் தேதியன்று பெறப்பட்ட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் மேற்படி சொத்துக்கள் மேற்படி ரங்காத்தாளுக்கு சுயார்ஜித வகையில் பாத்தியப்பட்டு கடந்த 37 வருடங்களாக தொடர் சுவாதீனத்தில் அனுபவித்து வருவதாக தெரிவித்துக்கொள்கிறார். மேற்படி ரங்காத்தாளின் இறப்பிற்கு பின்பு 14 மற்றும் 15 எதிர்மனுதாரர்கள் அனுபவ சுவாதீனத்தில் இருந்துகொண்டு வருவாய் ஆவணங்களும் மேற்படி எதிர்மனுதாரர்கள் பெயரில் தாக்கல் ஆகி உள்ளது.

2.2. மனு எண்.8ல் குறிப்பிட்டுள்ளபடி தாவா சொத்து ஆதியில் கொளந்தேகவுண்டருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டு அவரது இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகளான ராமனகவுண்டன் மற்றும் நஞ்சப்பகவுண்டன் ஆகியோர் 20.08.1934ம் தேதியன்று பாகபிரிவினை பத்திர

எண்.1502/1934 ன் படி பாகம்செய்து கொண்டனர். அதன்படி "A" அயிட்ட சொத்து ராமனகவுண்டருக்கும், "B" அயிட்ட சொத்து நஞ்சப்பகவுண்டனுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி ராமனகவுண்டர் வகையராவை ராவை சார்ந்தவர். இந்த 16 முதல் 19 வரை எதிர்மனுதாரர்கள் மேற்படி நஞ்சப்பகவுண்டரின் மகனான கொளந்தேகவுண்டரின் வாரிசுகளாவார். தாவாசொத்திற்கும், 16 முதல் 19 வரை உள்ள எதிர்மனுதாரர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. மேலும் மனுதாரரே எதிர்மனுதாரர்கள் அனுபவ சுவாதீனத்தின் அடிப்படையில் தாவாசொத்தில் உள்ளதாக குறிப்பிட்டுமனுவினை தாக்கல் செய்துள்ளார். மேலும் தாக்கல் செய்யப்பட்டு 10 வருடங்கள் கழித்து காலதாமதாமாக இவ்வழக்கில் சேர்க்கப்படவேண்டிய அவசியம் குறித்து தெளிவான விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை.

2.3. மனுதாரர்/வாதி இவ்வழக்கு தாக்கல் செய்யும்பொழுதே இந்த எதிர்மனுதாரர்கள் சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் இருப்பதை நன்கு தெரிந்துகொண்ட பின்பும் வழக்கின் தரப்பினராக கட்சிசேர்க்கப்படாமல் தற்பொழுது எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் கட்சிசேர்க்கவேண்டி மனுதாரரால் ஆர்டர் 23 ரூல் 4 சிபிசியின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு ஏற்புடையதல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

<u>3). தீர்வுக்குரியப் பிரச்சனை:</u>

கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>4). பிரச்சனைக்குத் தீர்வு:</u>

4.1. அசல் வழக்கு பாகபிரிவினைக்கு வாதி செந்தில்குமாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கு கடந்த 11.09.2017 அன்று வாதியின் வராத தவறுதலுக்காக தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் 19.09.2023 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இந்த நிலையில் இடைப்பட்ட காலத்தில் 1 ம் பிரதிவாதியும், 7 ம் பிரதிவாதியும் இறந்துவிட்டார்கள். எனவே அவர்களது

வாரிசுகள் இவ்வழக்கில் 10 முதல் 12 பிரதிவாதிகளாக சேர்க்க கேட்டும் 14 முதல் 19 பிரதிவாதிகள் விட்டுப்போன இதர வாரிசுகள் என்றும் 14 முதல் 17 பிரதிவாதிகள் பேரில்தான் தற்பொழுது தாவா சொத்து உள்ளது என்றும் அவர்களும் இவ்வழக்கில் அவசிய தரப்பினர்கள் என சேர்க்கக் கேட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.2. இவ்வழக்கு பாகபிரிவினை வழக்கு என்பதாலும் சொத்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களையும் சேர்த்து இறுதி தீர்ப்பு பிறப்பிப்பதால் இதில் உள்ள தரப்பினர்களுக்கு வழக்கு சொத்து சம்பந்தமாக இறுதியாக ஒரு முடிவு எட்டப்படும் என்பதால் இம்மனு அனுமதிக்கப்படலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வாதி இந்த மனுவை கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்திருக்க வேண்டும். தவறுதலாக கட்டளை 22 உட்பிரிவு 4ன் கீழ் தாக்கல் செய்திருப்பது சரிசெய்யக்கூடிய தவறே. அசல் வழக்கு 2007ல் தாக்கல் செய்யப்பட்ட பழைய வழக்கு என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2ம் நாள் வெள்ளிக்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2024.02.05 18:08:31 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

N RENUGA

Digitally signed by N RENUGA
Date: 2024.02.05 18:08:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சூலூர்.

Draft/Fair order
IA.3/2023 in
OS.383/2017 in
Dated: 02.02.2024
DMC, Sulur.